**தலைப்பு – 325 - இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த நிதிக்கூற்றுக்கள், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றறிக்கையின் 7(V) பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் கணிப்பிடப்படும் முறை காண்பிக் கப்பட்டிருந்த போதிலும், அதன்படி கணிப்பிடப்பட்டிராமை காரணமாக நிதி நிலைமைக் கூற்றிலுள்ள மொத்தச் சொத்துக்களிற்கும் நிதிப் பொறுப்புக்களிற்கும் இடையே ரூபா 288,600 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி செயற்படுவதன் மூலம் நிதி நிலைமைக் கூற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். | பொறுப்புக்களாக வெளித் தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டியிருந்த (நிர்மாண 5% பிடித்து வைத்தல்) ரூபா 288,600 தொகை ஒரு படிவத்திலுள்ள இரு இடங்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஒரு இடத்தில் மாத்திரம் அத்தொகை குறிப்பிடப் பட்டிருந்தமை காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சரியாக கணப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். |

### 1.6.2 மூலதனச் செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| எஸ்ஏ 6 – நிதி சாராத சொத்துக்கள் கூற்றில் உள்ளடங்கியுள்ள மீளாய்வாண்டின் கொள்வனவுகளின் மூலமான | நிதிக்கூற்றுக்களிலும் அதற்குரிய ஏனைய அறிக்கைகளிலும் | கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக உத்தரவாதக் காலத் |

| | | |
|---|---|---|
| சேர்த்தல்கள் ரூபா 17,313,411 கூட்டுத் தொகையாக இருந்ததுடன், அது எஸ்ஏ – 2(i) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவினக் கூற்றில் காண்பிக் கப்பட்டிருந்த மூலதனச் சொத்துக் கையேற்றல் செலவினமான ரூபா 17,189,254 உடன் இணங்கியிருக் காமை காரணமாக ரூபா 124,157 வேறுபாடு காணப்பட்டது. | உள்ளடங்கியுள்ள தொகைகளை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். | தில் திருப்பியனுப்பப்பட்டு கணிப்பீ ட்டு வழு பேரேட்டில் திருத்தப் பட்டுள்ளதுடன், அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட விடயங்களின் பெறு மதி சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத் திலிருந்து நீக்கப்படாமை காரண மாக இந்த வேறுபாடு ஏற்பட்டு ள்ளதுடன், அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சிகாஸ் நிகழ்ச் சித்திட்டத்துடன் ஒப்பிட்டு எதிர்கால த்தில் அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பத னைத் தெரிவித்துக் கொள்கின் றேன். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 ஏனைய நிறுவனங்களிற்கு உரித்தான சொத்துக்களை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** திணைக்களத்தினால் பயன்படுத் தப்பட்டு வருகின்ற கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் அமை ந்துள்ள உரிமை உரியவாறு கையேற்கப்பட்டிராத காணியிலு ள்ள 29 கட்டிடங்களை திருத்துவ தற்காக ரூபா 1,310,000 தொகை யும் புதிய கட்டிடத்தை நிர்மாணி ப்பதற்காக ரூபா 399,500,000 தொகையும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு செலவி டப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது. | வெலிகம பிரதேச செயலாளரின் 2016 யூன் 01 ஆந் திகதிய கடிதத்தின் படி 14 ஆம் சரத்தின் பிரகா ரம் இதுவரை உரி மை கையளிக்கப்ப டாமையால் கட்டிட நிர்மாண வேலை களை மேற்கொள்ள முடியாது. | சேதமடைந்த கட்டிடத்தை திருத் தியமைத்த பின்னர் உத்தியோக பூர்வ பணிகள் இடம்பெறுவதுடன் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தி யோகபூர்வ பணிகளின் தன்மை மற்றும் அதிகரிப்பு காணரமாக வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கட்டிடம் நிர்மாணிக் கப்பட்டது. |
| **(ஆ)** திணைக்களத்தினால் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சிலாபம் பிரதேசத்தில் அமைந்து ள்ள 0.9482 ஹெக்டயர் காணி முறையாக கையேற்கப்படாது பயன்படுத்தப்படுகின்றமை அவதா னிக்கப்பட்டது. | குறித்த சொத்தினை விரைவாகக் கையேற் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மனிதநேய நடவடிக்கைகள் இடம்பெற்ற காலத்தில் கடற் படையினால் மேற்கொள்ளப்பட்ட சில பணிகள் தற்போது இலங்கை கரையோரப் பாதுகாப் புத் திணைக்களத்தினால் நிறை வேற்றப்படுவதனால் அப்பணி களை வினைத்திறனாக மேற் கொள்வதற்கு கடற்படைத் தளபதியின் கடிதத்தின் மூலம் கையளிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் உரிமைத்துவதத்தினை உரிய பிரகாரம் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு உரிய அரசா |

| | | | |
|---|---|---|---|
| | | | ங்க நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **(இ)** | திணைக்களத்தினால் பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு உரித்துடைய மொத்தம் 2.1374 ஹெக்டயார் காணிகள் உரியவாறு கையேற்கப்படாது பயன்படுத்தி வரப்படுவதுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 52,327,020 மொத்தச் செலவினம் செய்யப்பட்டு அக்காணிகளும் கட்டிடங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த சொத்துக்களை விரைவாகக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்காணிகளை திணைக்களத்திற்கு கையேற்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நில அளவை வேலைகள் தற்போது முடிவடைந்துள்ள போதிலும், இது வரை உரிய விதத்தில் கையளிக்கப்படாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

### 3.1 கொள்வனவுகள்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 4.3.1 (அ) வழிகாட்டலின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீட்டினைத் தயாரிக்காது 09 சந்தர்ப்பங்களில் ரூபா 6,031,034 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் இருப்பு விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 4.3.1 (அ) பிரகாரம் கொள்வனவிற்கான மொத்தக் கிரய மதிப்பீட்டினைத் தயாரித்த பின்னரே கொள்வனவுகள் செய்யப்படுதல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் பொருட்களை கோருகையில் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தினை உரியவாறு குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், கப்பல்கள்/படகுகள் மற்றும் வழங்கல் திணைக்களத்தின் விடயத்திற்குப் பொறுப்பான கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | குறித்த திகதிகள் குறிப்பிடப்படாது கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகளிற்கு அமைய 02 சந்தர்ப்பங்களில் ரூபா 1,143,260 பெறுமதியான சொத்துக்களும் இருப்பு விடயங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறையாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இருப்புக்களை கொள்வனவு செய்தல் வேண்டும். கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி, குறித்த உடன்படிக்கைகளின் நிறுவனப் பிரதியில் திகதியினைக் குறிப்பிட்டு திருத்திக்கொள்ள முடியு | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இரண்டு ஆவணங்களில் தவறுதலாக உரிய திகதி குறிப்பிடப்படாதுள்ளதுடன், இத்தவறைத் திருத்துவதற்காக உரிய திகதிகள் இடப்பட்டு அந்த உடன்படிக்கைகள் திருத்தப்பட்டதுடன், இன்மேல் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருப்பதற்கு விடயத்திற்குப் பொறுப்பான கடற்படையினருக்கு அறிவிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | | மான போதிலும், வழங்குனரின் பிரதியினை திருத்துவதில் சிக்கல் ஏற்படலாம். | பட்டுள்ளது. |
| (ஆ) | சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூறுவிலைகளில் கையொப்பமிடப்பட்டிராமை காரணமாக கூறுவிலைகளை மதிப்பிடுகையில் அவற்றை நிராகரிக்காது 02 சந்தர்ப்பங்களில் ரூபா 1,236,044 பெறுமதியான வர்ணப்பூச்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. | கையொப்பமிடாது சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் தேசிய கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் பாரிய குறைபாடாவதனால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாது நிராகரிக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வழங்குனர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான கடற்படையினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், கையொப்பமிடப்படாத கூறுவிலைகள் இனிமேல் சமர்ப்பிக்கப்படின் அவற்றை நிராகரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | திணைக்களத்தினால் விடுதிகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்துவதெற்கென இரண்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2016 ஆகஸ்ட் மாதத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை மாதம் இடம்பெற்ற பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் இந்த 02 கட்டிடங்களையும் நிர்மாணித்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 14,645,183 பெறுமதியான கட்டிட நிர்மாண விடயத்தைப் பயன்படுத்தி அஸ்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 22,173,438 பெறுமதியான ஏனைய கட்டிடப் பொருட்கள் குறித்த வளவில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | ஏறத்தாழ 02 ஆண்டுகள் கடந்துள்ளமையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள கட்டிடப் பொருட்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் இந்த இரண்டு கட்டிடங்களினதும் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், இந்தக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள களஞ்சியப் பொருட்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைக் கலந்தாலோசித்த பின்னர் களஞ்சியப் பொருட்களை இனங்கண்டு, பட்டியலிட்டு, விலை மதிப்பிடுவதற்காக மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. |
| **(ஆ)** | இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த CG410 படகு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் | குறித்த படகினை துரிதமாக திருத்தி பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். | கடற்படையின் கிழக்குப் பிரதேச கட்டளைத் தளபதியின் 281543 ஆம் இலக்க 2019 மார்ச் மாத செய்தியின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்த வேலைகள் |

| | | |
|---|---|---|
| மற்றும் 02 மாதங்களாக பயன் படுத்தாது வைக்கப்பட்டிருந்தது. | | தொடர்ந்தும் இடம்பெறுவதுடன், அதன் பின்னர் கடற் பயணத்தில் ஈடுபடுத்துவதற்கு தயார்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டளையிடப்பட்ட பொருட்கள் தாம தமாக வழங்கப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்களில் ரூபா 327,720 தாமதக் கட்டணத்தை அறவிடாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப் பங்கள் அவதானிக்கப்பட்டன. | கொள்வனவு நடவடிக் கைகளின் போது தாம தமாக வழங்கப்படுகி ன்ற கட்டளைகளிற் காக தாமதக் கட்ட ணம் அறவிடப்பட்டு கொடுப்பனவு மேற் கொள்ளப்படுதல் வேண்டும். | கட்டளையிடப்பட்ட பொருட்கள் தாமதமாக வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் குறித்த வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டு அத்தாமதக் கட்டணத்தை துரிதமாக செலுத்து மாறு கடிதம் மூலம் அறிவிக் கப்பட்டுள்ளதுடன், இனிமேல் தாம தமாக வழங்கப்படுகின்ற சந்தர்ப்ப ங்களில் அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட்ட பின்னர் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** திணைக்களத்தினால் ரூபா 8.4 மில்லியன் செலவிடப்பட்டு நிர் மாணிக்கப்பட்டிருந்த மிரிஸ்ஸ மலக் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பில் நிதிசார் மற்றும் தொழில்நுட்ப சாத்தி யவள ஆய்வறிக்கை தயாரிக் கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அறிக்கை தயாரி க்கப்பட்டிராமை அவதானிக்க ப்பட்டது. | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின் னரே செயற்திட்டமொ ன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். சாத்தியவள ஆய்வொன்று மேற்கொ ள்ளப்பட்டிருப்பின் அந்த அறிக்கை கோவையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மா ணிப்பதற்கு முன்னர் நிதிசார் மற்றும் தொழில்நுட்ப சாத்தி யவள ஆய்வறிக்கை கோவையில் காணப்படாத போதிலும், அதற் காக செய்யப்பட்டிருந்த தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிரு ந்தவாறு முன்னாள் பொறியியல் உத்தியோகத்தரினால் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட் டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| **(ஆ)** மேற்படி சுத்திகரிப்பு நிலையம் சம்பந்தமான 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய பணிப்பாளர் பொறியியலாளரின் கடிதத்தின் படி, சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை ஒப்பீட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு முழு மையான இயலளவுடன் இந்த | பொறியியல் பணிப்பா ளரின் அறிக்கை வழங் கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்துள்ளன. வழங் கிய நிறுவனத்திற்கு எதிராக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்விடயம் தொடர்பில் குறித்த கம்பனிக்கு அறிவிக்கப்பட்ட போதி லும், அக்கம்பனியினால் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கை யும் எடுக்கப்படாமையால், அக்கம் பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய கோவை கரையோரப் பாதுகாப்பு சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பிவை |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரத்தை இயக்குவதற்காக நாளொன்றிற்கு தேவைப்படுகின்றன மின்வலு 25 கிலோவொட் மணியாக காணப்பட்ட போதிலும் இதனை இயக்குகையில் 50 கிலோவொட் மணி செலவாகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, கூறுவிலையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணையைக் காட்டிலும் மாதாந்த மின்சாரச் செலவினம் இருமடங்காக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | | க்கப்பட்டுள்ளது. |
| **(இ)** | மேற்படி சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேருகின்ற நீர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களிற்கு அமைய காணப்படுகின்றது என்பதனை 03 மாதத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதித்த பின்னர் சுற்றாடலுக்கு அகற்ற வேண்டிய போதிலும், சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 2016 மே 12 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துகையில் அதனுடன் தொடர்புடைய நியமங்களிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற நீரின் நியமம் தொடர்பில் எதிர்காலத்தில் பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஈ)** | கழிவுநீரை அகற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டில் கலிபவுசர் பயன்படுத்தியிருந்த 19 சந்தர்ப்பங்களிற்காக ரூபா 165,300 செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் வழங்குனருடன் ஏற்பட்டுள்ள பிணக்கு காரணமாக எதிர்காலத்தில் இச்செலவினம் மேலும் அதிகரிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த சுத்திகரிப்பு நிலையத்தை உரியவாறு செயற்படுத்துவதன் மூலம் சிக்கனமற்ற செலவினத்தைக் குறைத்தக் கொள்தல் வேண்டும். | இந்த சேவை வழங்குனருடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தீர்க்கப்படும் வரை அந்த நிறுவனத்துடன் இணைந்து சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கிச் செல்ல முடியாதிருப்பதனால், கலிபவுசர் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், கழிவுகளை அகற்றுவதற்காக கலிபவுசரை பயன்படுத்துகையில் குறைந்த தடவைகளில் அதிக பயனைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்புடைய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |